

# செழிப்பின் உபதேசம் கள்ள உபதேசமா?

ஜெயராஜ் விஜய்குமார்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! **செழிப்பின் உபதேசம் கள்ள உபதேசமா?** என்ற இந்த சிறிய மின்புத்தகத்தின் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி.

நீங்கள் விரும்பும் யாரோ ஒருவரின் பேச்சை மட்டும் கேட்டு எல்லாவற்றையும் நிதானியுங்கள் என்று வேதம் சொல்லாமல் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து அதில் எது நலமானதோ அதைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறது (1 தெச 5:21). ஏதேனும் ஒரு உபதேசத்தைக் குறித்து அறிய விரும்பினால் அதை அப்போஸ்தலர் 17-இல் வரும் பெரேயா பட்டணத்து கிறிஸ்தவர்களைப் போல அவற்றைப் பொறுமையாக கேட்டு நிதானித்து அது சத்தியத்தின்படி சரியானதாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சத்தியத்துக்கு ஒவ்வாததாக இருந்தால் அதை புறக்கணிக்கவோ வேண்டும்.



இந்த சிறு மின்புத்தகத்தின் மூலம் செழிப்பின் உபதேசம் குறித்த எனது பார்வைகளை உங்கள் முன் வைக்கிறேன். இந்த நூலிலுள்ள கருத்துக்களை பொறுமையாக வாசித்து, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடனும், வேத வசனத்தின் வெளிச்சத்திலும் ஆராய்ந்து பார்த்து நிதானிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக.

என்னுடைய பெயர் ஜெயராஜ் விஜய்குமார். இராணிப்பேட்டையில் வசிக்கிறேன். கடந்த 2008 முதல் எழுத்துக்கள் மூலமாகவும், மீடியாக்கள் வழியாகவும், சபைகளில் பிரசங்கங்கள் கருத்தரங்குகள் மூலமாகவும் சத்தியத்தை அறிவித்து வருகிறேன். கீழ்கண்ட எனது சமூகவலைதளங்கள் மூலமாக என்னைப் பின்தொடரலாம். இந்த நூல் பற்றிய தங்கள் கருத்துக்களை எனது மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம்.

**தொடர்புக்கு:**

Website: www.brovijay.com

Email: vijaykumar.jeyaraj@gmail.com

YouTube: www.youtube.com/c/JayarajVijaykumar/videos


Facebook: www.facebook.com/jayarajvijaykumar33

Twitter: twitter.com/brovijay1976

LinkedIn: www.linkedin.com/in/vijayartist

**முன்குறிப்பு**

தாங்கள் செழிப்பின் உபதேசத்தையும், செழிப்பை பிரசங்கிக்கிறவர்களையும் அடியோடு வெறுக்கிறவராக இருந்தால் தங்களுக்காகத்தான் இந்த முன்குறிப்பு. தாங்கள் வெறுக்கும் பிரசங்கியார்களை மனதில் வைத்துக் கொண்டு வாசிக்கும்வரை இப்புத்தகத்தினுள் இருப்பவை வெறும் கலர் கலரான தமிழ் alphabets-ஆகவே தோன்றும். எதுவுமே மனதில் ஒட்டாது. மனதில் ஏற்கனவே இருக்கும் கருத்துக்களையும், விருப்பு வெறுப்புகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு திறந்த மனதுடன் இந்த முழு புத்தகத்தையும் வாசித்து முடிப்பீர்களானால் இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள செழிப்பு என்ன என்பது தெளிவாக விளங்கும். தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி!




**ஏன் ஆசீர்வாதங்களைப் போதிக்கும் சபைகளில் கூட்டம் குவிகிறது, பாவம், நரகம், நியாயத்தீர்ப்பு என்று பேசும் சபைகளில் கூட்டம் மிகமிக குறைவாக இருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்ததுண்டா?**

உலகப் பொருளின் பின்னால் போவது எவ்வளவு ஆபத்து என்பது பற்றி வேதம் தெளிவாக பதிவு செய்து வைத்திருக்கிறது. அந்த வசனங்களையெல்லாம் வாசித்துவிட்டு உலக ஆசீர்வாதங்களைப் பேசும் சபைகளில் குவியும் மக்களைப் பார்க்கும்போது அவர்களெல்லோரும் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்ற எண்ணமே நமக்கு உண்டாகும் என்பதில் ஐயமில்லை. எனவே ஆசீர்வாதங்களை விரும்புவது விழுந்துபோன மனிதனின் அடையாளம் என்றே பலரும் நினைக்கிறார்கள். ஆனால் இது விழுந்துபோன மனிதனின் அடையாளம் அல்ல, விழுந்துபோன மனிதனுக்குள் தேவசாயல் இன்னும் கொஞ்சமாவது மிச்சமிருக்கின்றது என்பதற்கான அடையாளம் என்கிறேன். இதை வாசிக்கும்போது உங்களில் பலருக்கு 'பகீர்' என்றிருக்கும்... பதட்டமடையாமல் தொடர்ந்து வாசியுங்கள்.

எந்த ஒரு மென்பொருளும் அது எப்படி coding செய்யப்பட்டிருக்கிறதோ அப்படித்தான் இயங்கும். மனிதன் ஏதேன் தோட்டத்தில் எப்படி வாழவேண்டும் என்று தேவன் விரும்பினாரோ அப்படியே அவனது மரபணுவை அவர் வடிவமைத்தார். ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும், எப்படி இயங்க வேண்டும் என்கிற தகவல்களெல்லாம் அவனது மரபணுக்களில் ஒரு computer coding போல எழுதப்பட்டுள்ளது. மனிதனுக்குள் நியூக்கிளியோட்டைடுகளின் வரிசையாக

கட்டமைக்கப்பட்டிருக்கும் அந்த மரபுக் குறியீட்டை மனித புரிதலுக்கேற்ப தமிழில் decode செய்து பார்த்தால் அது கீழ்கண்டவாறு வரும்.


நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் (ஆதி 1:28)

விழுகைக்கு முந்திய காலத்தில் மனிதன் ஏதேனில் மிகுந்த சமாதானத்தோடும், செழிப்போடும், ஐக்கியத்தோடும், பெருகி உலகெல்லாம் பரவி வாழவேண்டும் என்கிற தேவதிட்டம் அவனது மரபணுக்களுக்குள் programme செய்யப்பட்டிருந்தது. சாத்தான் எப்படியோ பொய் சொல்லி ஏவாளை ஏமாற்றி மனிதகுலத்தை மீறுதலுக்கு உட்படுத்திவிட்டான். வெற்றி மமதையில் இருந்த அவனைப் பார்த்து சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் நகைத்திருக்கக் கூடும். ஏனென்றால் அதற்குப் பிறகுதான் அவனுக்கு பெரும் சவாலே காத்திருந்தது. மனிதன் பாவத்துக்கு உட்பட்டாலும் அவனுக்குள் செய்யப்பட்டிருந்த genitic programming அப்படியேதான் இருந்தது. அதை சாத்தானால் re-programming செய்ய முடியாது.

சற்று கற்பனை செய்து பாருங்கள், மனிதனின் மரபணுக்களை சாத்தானால் re-programming செய்ய முடிந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? மனிதர்கள் டிராகுலாக்களாக மாறியிருப்பார்கள்.

சற்று கற்பனை செய்து பாருங்கள், மனிதனின் மரபணுக்களை சாத்தானால் re-programming செய்ய முடிந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? மனிதர்கள் டிராகுலாக்களாக மாறியிருப்பார்கள். ஸ்திரீயின் வித்தாகிய கர்த்தர் இயேசு வெளிப்பட்டிருக்கவே முடிந்திருக்காது.

இங்கே பிசாசுக்கு பெரிய சிக்கல் என்னவென்றால் இனப்பெருக்கத்துக்கு ஆதாரமான பாலியல் ஆசை என்பது தேவனால் மனிதனுக்குள் programme செய்யப்பட்டிருந்தது. DRD4 என்ற மரபணுவே பாலியல் ஆசைக்கு காரணம் என்று சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த மரபணுவை மனித உடலில் இருந்து நீக்கிவிட்டால் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுவிடும். ஆனால் இன்றுவரை பிசாசானவனால் அதைச் செய்ய முடியவில்லை. அவனால் தேவசாயலில் மனிதப் பிரதிகள் உருவாகிக்கொண்டே இருப்பதை தடுக்கமுடியவில்லை. ஆனால் அவனால் ஒன்று செய்யமுடியும் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றி மனிதனைக் கறைப்படுத்த முடியும். அல்லது உலகத்தின் சிஸ்டத்தை கடினமாக்கி குழந்தை பிறந்தால் வளர்ப்பது கஷ்டம் என்ற சூழலை உருவாக்கி குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்த முடியும், அல்லது உணவிலோ மருந்திலோ கலப்படம் செய்து மனிதனுடைய உயிரணுக்களின் வீரியத்தைக் குறைத்து பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த முடியும். அதைத்தான் அவன் இன்றுவரை செய்து வருகிறான்.



அநேக கிறிஸ்தவர்கள் நினைப்பதுபோல பாலியல் ஆசை என்பது பிசாசின் திட்டத்துக்கு ஆதரவானதல்ல, தேவ திட்டத்து ஆதரவானது. அதனால்தான் விவாக மஞ்சம் கனமுள்ளது, பரிசுத்தமானது என்று எபிரெயர் 13:4 சொல்லுகிறது. விவாக மஞ்சத்தை தீட்டுப்படுத்தக்கூடாது என்ற எச்சரிக்கையும் அதே வசனத்தில் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இன்றும் மனிதர்கள் செல்வத்தைத் தேடியும், சமாதானத்தைத் தேடியும், உறவுகளைத் தேடியும் அலைவது பிசாசின் விருப்பமல்ல. மனிதனின் மரபணுவுக்குள் புரோகிராம் செய்யப்பட்டிருக்கும் தேவதிட்டம் அதை செய்ய மனிதனைத் தூண்டுகிறது. சுபாவப்படியான தேடலை திசைமாற்றி பாவமான வழிகளில் அவற்றை அடையும்படி மனிதனை வஞ்சிக்க பிசாசானவனால் முடியுமே தவிர, அந்தத் தேடலை மனிதனிடமிருந்து அவனால் நீக்கவே முடியாது. ஆனால் அந்த விருப்பங்களை மனிதனிடமிருந்து நீக்குவதே பிசாசின் விருப்பம். ஆனால் அதைச் செய்வதற்கான தொழில்நுட்பம் அவன் கைகளில் இல்லை.


எனவேதான் தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்ற பிரசங்கங்களை வஞ்சிக்கும் கள்ளப்பிரசங்கம் என்று வேதம் கடுமையாகச் சாடுகிறது (கொலொசேயர் 2:21). எல்லாவற்றையும் துறந்துவிட்டு ஓடும் சந்நியாச வாழ்க்கையை வேதம் ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்ற தேவதிட்டத்துக்கும், மரபணுவுக்குள் கட்டமைக்கப்பட்ட மனித சுபாவத்துக்கும் துறவறம் என்பது எதிரானது.

ஆகவேதான் சுபாவப்படியான தேடலாகிய பொருளாதாரச் செழிப்பு, சரீர சுகம், ஆளுகை என்று எந்த சபையில் பேசுகிறார்களோ அங்கே மக்கள் குவிகிறார்கள்.

**சரி, அப்படியானால் பரிசுத்தமும், நீதியும்கூட தேவசாயல்தானே? அதையும் சுபாவப்படி மனிதன் தேடித்தானே ஆகவேண்டும். அதன்படி பார்த்தால் பரிசுத்தத்தையும், நீதியையும் போதிக்கும் சபைகளிலும் மக்கள் குவிந்திருக்க வேண்டுமே, ஏன் அப்படி நடக்கவில்லை** என்ற கேள்வி இந்நேரத்தில் உங்களுக்கு உருவாகியிருக்குமானால் அதற்கு பதிலளிக்கும் முன்பதாக உங்கள் புத்திக் கூர்மைக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். ஏனெனில் கேள்வி கேட்பதே அறிவுத் தேடலில் முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும்.

**பரிசுத்தம், நீதி என்பவைவைகளுக்கான தேடல் மனிதனுக்குள் இயற்கையாகவே இருக்கிறதா?**

மற்ற தேடல்களைவிட மனிதனிடம் பரிசுத்தம் மற்றும் நீதிக்கான தேடல் அதிகமாகவே இருக்கிறது. அந்தத் தேடலை திசைதிருப்ப உருவாக்கப்பட்டதுதான் "மதம்" என்ற போதை. ஒரு கம்பியூட்டரில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் திரையில் பளீரென்று, beep சத்தத்துடன் ஒரு Error Message வருகிறதல்லவா?



அந்த Error Message எங்கோ கம்பியூட்டருக்கு வெளியே இருந்து வருவதில்லை. ஏதேனும் தவறு ஏற்பட்டால் Error Message-ஐ காட்டி எச்சரிப்பதற்கென்று கம்பியூட்டருக்குள்ளேயே அந்த கட்டமைப்பு வசதி செய்து வைக்கப்பட்டுள்ளது. அதேவிதமாக மனிதனுக்குள் செய்யப்பட்டிருக்கும் கட்டமைப்புதான் "மனசாட்சி" என்பது. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் மனித மூளையில் உள்ள lateral frontal pole prefrontal cortex என்ற பகுதிதான் மனசாட்சியாக செயல்படுகிறது என்பதை கண்டறிந்து உலகத்துக்கு அறிவித்துள்ளனர்.

பாவம் செய்துவிட்டு அந்த மனசாட்சியை ஆற்றுப்படுத்த, பாவ மன்னிப்பைப் பெற மனிதன் படும் பாடு இருக்கிறதே அதைச் சொல்லி முடியாது. மனசாட்சியை ஆற்றுப்படுத்த தன்னைத்தானே உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் துன்புறுத்திக் கொள்வதில் எந்த எல்லைக்கும் மனிதன் செல்லத் தயாராக இருக்கிறான். புனித வெள்ளிக்கிழமையன்று பிலிப்பைன்ஸ் தேசத்தில் தன்னைத் தானே சிலுவையில் அறைந்து துன்புறுத்திக் கொள்ளும் கிறிஸ்தவர்களைக் குறித்து செய்தித்தாளில் வாசித்திருக்கிறீர்களா? ரூபன் எனாஜே என்ற ஒரு மனிதன் கடந்த 2019-வரை மட்டும் தன்னை 33 முறை சிலுவையில் அறைந்துகொண்டதாக தெரிவித்திருக்கிறார். இவையெல்லாம் எதற்கு?

மனிதன் பரிசுத்தமாக வாழும்படிக்கே வடிவமைக்கப்பட்டு இருக்கிறான். தான் கறைப்பட்டதாக உணரும்போதோ அந்தக் கறையை கழுவுவதற்காக தன்னைத் தானே கடுமையாக வருத்திக் கொள்கிறான். ஒரு மனிதன் தன்னைப் படைத்தவரைப் போலவே பரிசுத்தமாக, நீதியாக வாழவேண்டும் என்கிற கட்டளைகளெல்லாம் அவனது மரபணுக்களில் ஒரு computer coding போல எழுதப்பட்டுள்ளது.

**நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும்** மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் (ஆதியாகமம் 1:26)

எனவே மனிதனுக்கு பரிசுத்தத்தின் மேல், நீதியின்மேல் வாஞ்சையில்லை என்ற வாதங்களெல்லாம் ஏற்புடையவை அல்ல. பரிசுத்தம் மற்றும் நீதியை அடைவதற்கான வழிகளை அறியாமல் இருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். மனிதன் தன்னை வருத்தியேனும், தன்னிடமுள்ள செல்வங்களை வாரிக்கொடுத்தேனும் மனசாட்சியை ஆற்றுப்படுத்த தவியாய் தவிக்கிறான் என்பதற்கு உலகம் முழுவதும் இருக்கும் பல்வேறு மத வழிபாட்டுத் தலங்கள் சாட்சியாய் நிற்கின்றன.

ஆனால் உண்மையில் பாவத்தின் விளைவாக மனிதன் தேவனுக்கு incompatible ஆக மாறிவிட்டான். தேவசாயல் இன்னும் உள்ளே இருப்பதன் விளைவாக பிசாசுக்கும் incompatible ஆக, அதாவது ரெண்டும்கெட்டானாக மாறிவிட்டான். மாம்சம், ஆவி என்ற இரண்டும் அவனுக்குள்ளேயே ஒன்றுக்கொன்று போராடிக் கொண்டிருப்பதால் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கிறான். அவனை பிசாசுக்கு முற்றிலும் compatible ஆக மாற்ற world system அவன் மாம்சத்தோடு கூட்டணி அமைத்துப் போராடிக் கொண்டிருக்கிறது. அவனை தேவனுக்கு முற்றிலும் compatible ஆக மாற்ற சுவிசேஷம் அவன் ஆவியோடு கூட்டணி அமைத்துப் போராடிக்கொண்டிருக்கிறது.

யூதர்கள் மட்டும்தானே தங்களுக்கு இரட்சகரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் தேவதூதனோ "யூத ஜனங்களுக்கு நற்செய்தி" என்று சொல்லாமல் "எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி" என்று சொன்னதன் காரணத்தை ஆராய்ந்து பாருங்கள்

தனது பாவங்களுக்கு ஒட்டுமொத்த பிராயச்சித்தம் வேண்டும் என்ற அங்கலாய்ப்பு ஒவ்வொரு மனித ஆழ்மனதினுள்ளும் நெருப்பாக பற்றியெரிந்துகொண்டிருக்கிறது. அந்த அங்கலாய்ப்புக்கு விடையாகத்தான் வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து மாம்சமாகி பூமிக்கு இறங்கி வந்தார். அவரது கையில்தான் "சுவிசேஷம்" என்ற மீட்புக்கான சாவி இருந்தது. அதனால்தான் அவர் பூமியில் உதித்த தினத்தன்று ஒரு தேவதூதன் வந்திறங்கி, "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் (லூக்கா 2:11) என்று அறிவித்தான். யூதர்கள் மட்டும்தானே தங்களுக்கு இரட்சகரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் தேவதூதனோ "யூத ஜனங்களுக்கு நற்செய்தி" என்று சொல்லாமல் "எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி" என்று சொன்னதன் காரணத்தை ஆராய்ந்து பாருங்கள்.

**எல்லாம் சரிதான், ஆனாலும் பாவத்தைக் குறித்து அதிகமாக கண்டித்து உணர்த்தும் சபைகளில் ஏன் கூட்டமில்லை என்ற கேள்விக்கான பதிலை ஆராயலாம்.**

பிரச்சனை மக்களிடத்தில் அல்ல, அந்த சபைகளிடத்தில்தான் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

ஒரு பணக்கார வீட்டில் ஒருநாள் திருடன் புகுந்து பணம், நகை, விலையுயர்ந்த சாதனங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அத்தனையையும் திருடிச் சென்றுவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். பொருட்களை பறிகொடுத்த வீட்டார் காவல்நிலையத்துக்குச் செல்லுகிறார்கள்.

அந்த காவல்துறை அதிகாரி இவர்களை வித்தியாசமாக நடத்துகிறார், அதாவது தன் சொந்த உடைமைகளை இழந்த உரிமையாளர்கள் என்ற ரீதியில் அவர்களைப் பார்க்காமல். வாழ வழியற்ற பிச்சைக்காரர்கள் என்ற கோணத்தில் அவர்களைப் பார்த்து அவர்களுக்கு எது தேவை என்று இவரே முடிவு செய்கிறார்.

திருடன் திருடிச் சென்றது அவ்வளவுதான் இனி அவற்றையெல்லாம் நினைத்துக் கூடப் பார்க்காதீர்கள். நீங்கள் இழந்த ஆவணங்களை வேண்டுமானால் உங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி சில நாட்கள் கழித்து சில ஆவணங்களைக் கொண்டு வந்து அவர்களிடம் கொடுக்கிறார்.

சரி பரவாயில்லை திருட்டு போன ஆவணமாவது கிடைத்ததே என்று வீட்டுக்கு வந்து பிரித்துப் பார்த்தால் அவை திருட்டுப்போன அதே ஆவணங்கள் அல்ல, அவை போன்றே உருவாக்கப்பட்டவை. அவர்கள் மீது உள்ள பரிதாபத்தில் அந்த அதிகாரியே அந்தப் ஆவணங்களை தாமாக உருவாக்கி கொடுத்திருக்கிறார். ஆனால் அவை அதிகாரபூர்வமானவை அல்ல, எந்த அரசு அலுவலகத்திலும் அது செல்லாது.

கதை கொஞ்சம் இயல்பு வாழ்க்கைக்கு பொருந்தாத கற்பனையாகத் தோன்றினாலும் அந்த அதிகாரி செய்த அதே வேலையைத்தான் இன்று சில சபைகள் செய்கின்றன. ஏதேனில் மனிதன் தேவனோடு இருந்த ஐக்கியத்தையும், தனது பரிசுத்தத்தை மட்டும் இழக்கவில்லை, தனது நித்திய ஜீவனை இழந்தான், நிறைவான வாழ்க்கையை இழந்தான், சமாதானத்தை இழந்தான், இளைப்பாறுதலை இழந்தான், ஆரோக்கியத்தை இழந்தான், பூமியின் மீது இருந்த உரிமையை இழந்தான், ஆளுகையை இழந்தான், மகிழ்ச்சியை இழந்தான், எதிர்கால நம்பிக்கையை இழந்தான் அனைத்தையும் இழந்தான். சர்வ சிருஷ்டியும் அதன் விளைவாக மாயைக்குள் பிரவேசித்தது (ரோமர் 8:21).

இவர்கள் உனக்கு தேவனோடு இருக்கிற ஐக்கியமும், பரிசுத்தமுமே முக்கியம். எனவே அவற்றை மட்டும் உனக்குத் திருப்பித்தருகிறோம் என்கிறார்கள். தேவனோடு உள்ள ஐக்கியமும், பரிசுத்தமும் மகா முக்கியமானவைகள் என்பதிலும், லிஸ்ட்டில் முதலிடத்தில் இருப்பவை என்பதிலும் மாற்றுக்கருத்து இல்லை. **அதை மட்டும் பெற்றுத்தந்தால்கூட போதுமானதுதான்,** ஏனெனில் அதைப் பெற்றுக் கொண்டால் ஏனையவை அனைத்தும் தானே வந்து சேர்ந்துவிடும்.

ஆனால் இவர்களோ தேவனிடத்தில் திருப்புகிறேன், பரிசுத்தமாக்குகிறேன் என்று சொல்லி கிரியைகளால் உண்டாகும் நியாயப்பிரமாண நீதியையே பிரசங்கிக்கிறார்களேயன்றி புதிய உடன்படிக்கையின் கிறிஸ்துவினால் உண்டாகும் தேவநீதியைப் பிரசங்கிப்பதில்லை. **இதுதான் இப்படிப்பட்ட சபைகளின் தோல்விக்குக் காரணம்.** அதுமட்டுமல்ல கிட்டத்தட்ட கிழக்கத்திய மதங்களில் துறவறத்துக்கு ஒப்பான ஒரு வாழ்க்கை முறையைக் கற்றுக்கொடுத்து பரிசுத்தம் தவிர மற்ற ஆசீர்வாதங்களை நீ அடைவதெல்லாம் தேவசித்தம் அல்ல என்றும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

ஒரு கம்பியூட்டர் ஷோரூம் இருக்கிறது, அந்த ஷோரூம் முதலாளி தனது வாடிக்கையாளர்களுக்கு எது தேவை என்று அவரே முடிவு செய்கிறார்.

ஸ்பீக்கர்கள் அல்லது ஹெட்போன் இருந்தால் சினிமா பாட்டு கேட்பார்கள் எனவே அது வேண்டாம். பென்-டிரைவ் இருந்தால் அதில் சினிமா போட்டு பார்ப்பார்கள் எனவே அதுவும் வேண்டாம், இண்டெர்நெட் மோடம் விற்றால் அதைப் பயன்படுத்தி ஆன்லைனில் ஆபாசப் படம் பார்ப்பார்கள் அது வேண்டாம், பிரிண்டர் இருந்தால் கண்ட கதைகளையும் பிரிண்ட் அவுட் எடுத்து படிப்பார்கள் அதுவும் வேண்டாம். வெப்-கேம் இருந்தால் எதிர்பாலரோடு சாட்டிங் செய்து பாழாய் போவார்கள் அதுவும் வேண்டாம்.



அவர்களுக்கு எதுதான் தேவை? எல்லோருடைய கம்பியூட்டர்களும் வைரஸ்களாலும், ஸ்பைவேர்களாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது எனவே நான் ஆண்ட்டி வைரஸ் சாப்ட்வேர்கள் மட்டுமே விற்பேன் என்று முடிவெடுப்பாரானால் தனது ஆண்ட்டி வைரஸ் சாப்ட்வேர்களை வைத்துக்கொண்டு அவர் மட்டுமே கடையில் உட்காந்திருக்க வேண்டியதுதான்.

இதுபோன்ற Anti-virus only கடைகளைத்தான் கிறிஸ்தவத்தில் நிறைய பார்க்கிறோம். குறைந்த பட்சம் அந்த ஆண்ட்டி வைரஸாவது சரியானதாக இருக்கிறதா என்றால் அது Latest update-ஆன கிருபை ஆண்ட்டி வைரஸாக இல்லாமல் Expiry ஆன நியாயப்பிரமாண ஆண்ட்டி வைரஸாக இருப்பதுதான் பிரச்சனையே, அவற்றை install செய்தால் கம்பியூட்டரில் பிரச்சனைகள் மேலும் சிக்கலாகி விடுகின்றன.

உலகப் பொருளுக்கு பின்னால் ஓடுவதை கண்டித்து புதிய ஏற்பாட்டில் மட்டும் ஒன்றல்ல, இரண்டல்ல ஏகப்பட்ட வசனங்கள் இருக்கின்றன (மத்தேயு 4:9,10, மத்தேயு 6:24, மத்தேயு 13:22, மத்தேயு 19:21,22, மாற்கு 4:18, மாற்கு 10:21-23, லூக்கா 12:16-21, லூக்கா 16:13, லூக்கா 18:22-24, 1 தீமோ 3:3, 1 தீமோ 6:6-11, 1 தீமோ 6:17, யாக்கோபு 4:4, யாக்கோபு 5:5). இவற்றையெல்லாம் அறியாமலோ, அல்லது வாசிக்காமலோ நான் இந்த சிறு புத்தகத்தை எழுதவில்லை.

> பண ஆசைக்கும், பொருளாசைக்கும் தேவன் என்றுமே எதிரானவர்தான்

பண ஆசைக்கும், பொருளாசைக்கும் தேவன் என்றுமே எதிரானவர்தான். அது பழைய ஏற்பாடானாலும் சரி, புதிய ஏற்பாடானாலும் சரி. ஆனால் தேவன் என்றுமே செழிப்புக்கும், ஐசுவரியத்துக்கும் எதிரானவர் அல்ல, ஏனென்றால் அவை அனைத்தும் அவரது உடைமைகள்தான். நாம் இந்த வித்தியாசத்தைப் புரிந்தவர்களானால் ஏற்கனவே ஓரளவு தெளிவில்தான் இருக்கிறோம் என்று பொருள். மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் ஐசுவரியத்தை அல்ல ஐசுவரியம் குறித்த நமது மனநிலையையே விமர்ச்சிக்கின்றன.

வசனத்தை அது கொடுக்கப்பட்டதன் நோக்கத்தை ஆராயாமல், எழுத்தை எழுத்தின்படியே எடுத்துக்கொண்டால் ஒருவன் கத்தி எடுத்து இடறல் உண்டாக்கிய கண்களை தோண்டி வெளியே எறிந்தால் எப்படி இருக்குமோ, இடறல் உண்டாக்கிய கையை வெட்டி எறிந்தால் எப்படி இருக்குமோ அப்படியே ஆகிவிடும். மதப்பித்து பிடித்த பரிசேயர்களின் கதை அதுதான்.



குரங்கு கையில் சிக்கிய பூமாலை எப்படியோ மதவாதிகள் கையில் சிக்கிய கட்டளையும் ஆகும்.

ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிப்பாயாக என்றுதான் தேவன் கட்டளை கொடுத்தார். ஆனால் ஓய்வுநாளில் 2000 cubits தூரம் மட்டுமே நடக்க வேண்டும் என்ற அளவுகோலை பரிசேயர்கள்தான் பாபிலோனிய தால்முத்தில் கொண்டு வந்தார்கள்.

தசமபாகம் செலுத்த வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டில் தேவனுடைய கட்டளைதான், ஆனால் பரிசேயர்கள் வெந்தையத்தையும் சீரகத்தையும் ஒவ்வொன்றாக உன்னிப்பாக உட்காந்து எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

நியாயப்பிரமாணத்தில் "பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக" என்று லேவி 11:23-இல் சொல்லப்பட்டிருப்பதற்காக தாங்கள் குடிக்கும் திராட்சைரசத்தைக்கூட கொசுக்களைவிட மிகச்சிறிய பூச்சிகள்கூட இல்லாதபடி வடிகட்டிக் குடித்தார்கள்.

குரங்கு கையில் சிக்கிய பூமாலை எப்படியோ மதவாதிகள் கையில் சிக்கிய கட்டளையும் ஆகும்

ஒருவர் ஆசீர்வாதத்தை போதிக்கிறார் என்றால் எந்தப் புரிதலில் அவர் அதை போதிக்கிறார் என்பதை ஆராய்ந்துதான் அவரது பிரசங்கத்தை நிதானிக்க வேண்டும். வெறுமனே ஜனங்களின் ஐசுவரிய மயக்கத்தை சாதகமாக்கிக் கொண்டு தான் லாபமடையும் நோக்கில் அவர்களை இயேசுவை விட்டு உலகப் பொருளின் பக்கம் திருப்புகிறவராக இருக்கிறாரா, அல்லது புதிய உடன்படிக்கையையும், பரலோக ராஜ்ஜியத்தையும் தானும் சரியாக புரிந்து கொண்டு விசுவாசிகளையும் சரியான புரிதலுக்குள் நடத்துகிறாரா என்பதை அவரது பிரசங்கங்களே காட்டிக்கொடுத்துவிடும்.

ஜனங்களின் பலவீனத்தை தனக்கு சாதகமாக்கும் ஊழியர்கள் அந்தக்காலத்திலிருந்து இன்றுவரை இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை

அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்.(பிலி 3:18,19) என்று பவுல் இப்படிப்பட்டவர்களைக் குறித்துத்தான் சொல்லுகிறார்.

ஆனால் ...

மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? அவன் எப்படிப்பட்டவனாகப் படைக்கப்பட்டான்? அவன் சர்ப்பத்தின் தந்திரத்தால் எதையெல்லாம் இழந்தான். அதை திரும்பித்தர தேவன் அறிமுகப்படுத்திய மீட்பின் திட்டம் என்ன? அந்த திட்டம் எப்படி இயேசுகிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றப்பட்டது? அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக மனிதனுக்கு மீண்டும் கிடைத்த சிலாக்கியங்கள் எவை? புதிய உடன்படிக்கைக்கு உட்படுவதன் மூலம் ஒரு தனி மனிதன் அந்த சிலாக்கியங்களை எப்படி சுதந்தரித்துக் கொள்ளமுடியும்? அந்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்ட மனிதனுக்கு இருக்கும் கடைமைகள் என்ன? என்பதை வேத வசன ஆதாரங்களுடன் ஒருவர் தெளிவாக விளக்கிக் கூறுவாரானால் அதுவே சரியான, முழுமையான செழிப்பின் பிரசங்கமாக இருக்க முடியும்.

> எங்கு பாரத்தை இறக்கி அனுப்புகிறார்களோ அங்குதான் கூட்டம் வரும், ஆனால் பரிசேயர்களுக்கு பாரத்தை சுமத்தி அனுப்பத்தான் தெரியுமே தவிர இறக்கி அனுப்பத் தெரியாது.

மேற்கண்ட காரியங்களில் சபை மக்கள் சரியான புரிதலுக்குள் வரவேண்டும் என்பதே பவுலின் ஊக்கமான ஜெபமாக இருந்தது என்பதை எபேசியர் 1: 15-19 வசனங்கள் சொல்லுகின்றன.

இப்படிப்பட்ட பிரசங்கங்கள் எந்த சபையில் தொனிக்கிறதோ அந்த சபையை நோக்கித்தான் மக்கள் படையெடுக்கிறார்கள். அந்தப் பிரசங்கங்கள்தான் சமூக வலைதளங்களில் தீயைப் போல பரவுகிறது. இதுதான் பரலோக ராஜ்ஜியத்தின் திட்டமும்கூட. இதை யாராலும் தடுக்க முடியாது.

எங்கு பாரத்தை இறக்கி அனுப்புகிறார்களோ அங்குதான் கூட்டம் வரும், ஆனால் பரிசேயர்களுக்கு பாரத்தை சுமத்தி அனுப்பத்தான் தெரியுமே தவிர இறக்கி அனுப்பத் தெரியாது. எங்கள் சபைக்குக் கூட்டம் வராததற்குக் காரணம் நாங்கள் சத்தியத்தை சொல்லி சத்துருவானோம் என்று தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதில் அர்த்தமில்லை.

## செழிப்பு என்பது என்ன?

செழிப்பையும் பரிசுத்தத்தையும் ஒருபோதும் வெவ்வேறாகப் பிரிக்காதீர்கள். பரிசுத்தம், நீதி, ஜீவன், ஆரோக்கியம்,ஐசுவரியம், நிறைவு, மகிழ்ச்சி, சமாதானம், பெருக்கம், காரியசித்தி அனைத்தும் சேர்ந்ததுதான் நிறைவான செழிப்பான ஏதேன் தோட்ட வாழ்க்கை. செழிப்பு என்பதில் பணமும் இருக்கிறது, ஆனால் பணம் மட்டுமே செழிப்பு அல்ல.

குற்ற உணர்வுகள் நீங்கி, தண்டனைக்கான பயம் இன்றி, பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிச்சயத்தோடு, பிதா தன்னை பரிசுத்தனாகவும், கிறிஸ்துவுக்குள் தேவநீதியாகவும் பார்க்கிறார் என்ற அறிவுடன், மரணக் கட்டுகளுக்கு நீங்கலாகி நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொண்ட

நன்றியுடன், தேவைகள் அனைத்தும் சந்திக்க அப்பா ஒருவர் இருக்கிறார் என்ற தைரியத்துடன், தனக்கு மிகச் சிறப்பான எதிர்காலம் உள்ளது என்ற நம்பிக்கையுடன் வாழ்வதே செழிப்பான வாழ்க்கை.

இப்படிப்பட்ட சிந்தை முதலாவது உங்கள் ஆத்துமாவுக்கு வந்துவிட்டால் உங்கள் உலக வாழ்வில் அது பிரதிபலித்தே தீரும். இதன் அடிப்படையில்தான் பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவா 1:2 ) என்று அப்போஸ்தலனாகிய யோவான் விசுவாசிகளை வாழ்த்துகிறார்.



இதைத்தான் மனம் போல வாழ்க்கை என்று உலகத்தார் சொல்லுகிறார்கள். “மனம்” என்ற ஒன்றைத்தான் நாம் ஆத்துமா அல்லது இருதயம் என்று அழைக்கிறோம்.

உங்கள் சபைக்கு எத்தனை ஆத்துமாக்கள் வருகிறார்கள்?, ஆத்தும ஆதாயம் செய்கிறீர்களா? என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி...என்று மூச்சுக்கு முந்நூறு தடவை ஆத்துமா பற்றி பேசும் கிறிஸ்தவர்களில் பலருக்கு ஆத்துமா என்றால் என்னவென்றே தெரியாமலிருப்பதுதான் பல குழப்பங்களுக்குக் காரணம். பலர் ஆத்துமா என்பது பேய்ப்படங்களில் வருவது போல வெளிப்புற உடல் போன்றே தோற்றம் கொண்டிருக்கும் கண்ணுக்கு புலப்படாத ஆவி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிந்தனை, சித்தம், உணர்ச்சி ஆகியவைகளின் தொகுப்பாகிய மனம்தான் ஆத்துமா. ஆத்தும ஆதாயம் என்பது ஒருவருடைய மனதை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துவதுதான். எனவேதான் அதற்கு “மனந்திரும்புதல்” என்று பெயர். கிறிஸ்துவிடம் திரும்பிய அந்த மனம் புதிதாகும்போது அந்த நபர் வெளிப்புறத்திலும் மறுரூபமடைகிறார் (ரோமர் 12:2).

> “மனம்” என்ற ஒன்றைத்தான் நாம் ஆத்துமா அல்லது இருதயம் என்று அழைக்கிறோம்

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது முழுக்க முழுக்க மனம் சார்ந்தது. எனவேதான் வெளிப்புற தோற்றத்தில் மட்டும் மாற்றத்தை போதிக்கும் பிரசங்கங்கள் கடுமையாக விமர்ச்சிக்கப்படுகின்றன. கர்த்தர் இயேசுவும்கூட “குருடனான பரிசேயனே! போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு” என்று மத்தேயு 23:26-இல் கூறுவதைப் பார்க்கிறோம். அப்படியானால் உட்புறத்தில் என்ன இருக்கிறதோ அது வெளிப்புறத்திலும் பிரதிபலிக்கும் என்பதை கர்த்தர் இயேசுவின் வாய்மொழி மூலமாகவே அறிகிறோம்.

அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் (நீதி 23:7)

எனவேதான், எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும் என்று நீதிமொழிகள் 4:23 சொல்லுகிறது.

உங்கள் மனதைக் கைப்பற்றிவிட்டால் உங்களை முற்றிலும் பாழாக்கிவிடலாம் என்று பிசாசின் கணக்கு, நீங்கள் மனம் திரும்பிவிட்டால் உங்களை முற்றிலும் புதிதாக்கிவிடலாம் என்பது தேவனுடைய கணக்கு. ஆக, யுத்தகளம் உங்கள் மனம்தான். ஏதேன் தோட்டத்தில் சர்ப்பத்துடைய குறி ஏவாளின் மனதுதான் என்பதை கீழ்கண்ட வசனத்தில் பவுல் கொரிந்து சபையாருக்கு கற்றுக்கொடுக்கிறார். ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, **உங்கள் மனதும்** கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன் (2 கொரி 11:3).




உங்கள் மனதில் எதை சிந்திக்கிறீர்களோ நீங்கள் அதுவாக மாறிவிடுகிறீர்கள் என்பதுதான் உளவியல் உண்மையும்கூட. எனவேதான் உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ **அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்** (பிலி 4:8) என்று பவுல் ஆலோசனை கூறுகிறார்.

வெகுநாட்களாக பழுதடைந்து கிடந்த ஒரு கம்பியூட்டர் சரிசெய்யப்பட்டு, வைரஸ்கள் நீக்கப்பட்டு மீண்டும் power source-உடன் இணைக்கப்பட்டு on செய்யப்பட்டால் அதுவரை செயலிழந்து இருந்த programme-களெல்லாம் மீண்டும் செயல்படத் துவங்கி, எப்படி கம்பியூட்டர் மறுபடியும் சீராக இயங்கத் துவங்குமோ அப்படியே கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவை தியாகத்தின் மூலம் மீட்கப்பட்ட மனிதனும் தான் உருவாக்கப்பட்ட நோக்கத்தின்படி மறுபடியும் செயல்படத் துவங்குகிறான்.

அது மீண்டும் செயல்படத் துவங்கினால் எப்படியிருக்கும் என்ற மாதிரியைத்தான் நசரேயனாகிய இயேசு தனது வாழ்வில் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்

அதுவரை பாவம் என்கிற வைரஸால் பாதிக்கப்பட்டு தவறாக செயல்பட்டுவந்த, அல்லது செயல்படாமல் முடங்கியிருந்த அவனது "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் (ஆதி 1:28)" என்ற code மறுபடி சீராக செயல்படத் துவங்குகிறது.

ஒருமுறை வைரஸ் பாதித்து கம்பியூட்டர் சீர்கெட்டு இயங்கியது என்ற காரணத்துக்காக தேவன் அதன் programme code-ஐ மாற்றி எழுதவில்லை. அல்லது நீக்கிவிடவில்லை. அது அப்படியேதான் இருக்கிறது. அது மீண்டும் செயல்படத் துவங்கும். அது மீண்டும் செயல்படத் துவங்கினால் எப்படியிருக்கும் என்ற மாதிரியைத்தான் நசரேயனாகிய இயேசு தனது வாழ்வில் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார். அவரது வாழ்க்கை சரிதையை சுவிசேஷ நூல்களில் வாசிக்கும்போது அவர் தனது அனுதின வாழ்வில் ஆதி 1:28-ஐ அவர் அழகாக செயல்படுத்தியதை நாம் கவனிக்க முடியும்.

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோவான் 14:12).

தேவபுத்திரராகிய நாம் பலுகிப் பெருக வேண்டும், பரலோக ராஜ்ஜியமானது பூமியை நிரப்ப வேண்டும், அதை கீழ்படுத்த வேண்டும், கிறிஸ்துவோடு இணைந்து நாம் ஆளுகை செய்ய வேண்டும் என்ற தேவ சித்தத்தை நமது மனதில் இருத்திக் கொள்ளும்போது முதலாவதாக நமது மனம் அதற்கேற்ற விதத்தில் புதிதாகி நாம் மறுரூபமடைகிறோம். அதன் பிறகு சகலமும் தலைகீழாய் மாறுகிறது. அப்போதுதான் நமது இரட்சகர் தாம் சிலுவையில் பட்ட ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாகிறார் (ஏசா 53:11). அந்த நாளுக்காகத்தான் சிருஷ்டியும் மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது.

> அதன் பிறகு சகலமும் தலைகீழாய் மாறுகிறது

ஏனெனில் நம்முடைய வீழ்ச்சியினாலே மாயைக்கு அடிமைப்பட்டிருந்த சிருஷ்ட்டி, நாம் கிறிஸ்துவாலே மீட்கப்பட்டதால் தானும் அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்படும் என்ற நம்பிக்கையோடே ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது (ரோமர் 8:19-22)

இதுதான் உண்மையான செழிப்பின் உபதேசம். ராஜ்ஜியத்தின் சுவிசேஷமும் இதுவே! இந்த உபதேசம் ஒவ்வொரு சபைகளிலும், வீட்டுக் கூட்டங்களிலும் பிரசங்கிக்கப்படவேண்டும். இந்த செய்தி பிரசங்கிக்கப்படும்போது உங்கள் மனம் ஆறுதலினாலும், தைரியத்தினாலும், சந்தோஷத்தினாலும் நிறைகிறது. பாரங்களெல்லாம் பறந்தே போகிறது. மனம் நேர்மறை சிந்தையை தரித்துக் கொள்ளுகிறது. அது விரைவில் உங்கள் உலக வாழ்விலும் வெளிப்பட்டே தீரும். உங்கள் முகம் மலர்ச்சியடைகிறது, உடல் ஆரோக்கியமடைகிறது, நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியடைகிறது, செல்வம் தானாக வந்து உங்கள் காலடியில் குவிகிறது. இவை அனைத்தும் by products-தான். இந்த by products-ஐப் பெறுவதுதான் நமது பிரசங்கத்தின் நோக்கமாக இருக்கக் கூடாது, ஆனால் சரியான சத்தியத்தை பிரசங்கிப்பதன் பின்விளைவாக இவைகள் தானாக நம்மை வந்து சேரும்.

## செழிப்பைப் பெற்றுக்கொள்வது எப்படி?

நாம் ஜெபிப்பதாலோ, உபவாசிப்பதாலோ அல்லது வேறு ஏதேனும் கிரியைகளை செய்வதாலோ செழிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது. நாம் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து புதிய உடன்படிக்கைக்குள் நுழைந்தாலே செழிப்பு நமது பங்காக மாறிவிடுகிறது. செழிப்பான வாழ்வு என்பது பிள்ளைகளின் அப்பம், நமது உரிமைச் சொத்து.

ஒரு கோடீஸ்வரத் தகப்பனுக்கு பிறந்த மகன் தன் அப்பாவின் சொத்தைப் பெற எதுவும் செய்ய வேண்டியதில்லை. அது ஏற்கனவே அவனுக்கு உரியதுதான். நாம் சத்தியத்தை அறிந்து அதை விசுவாசித்தால் போதும். இந்த விசுவாசம் நமது மனதை நிரப்பிவிட்டாலே நமது வாழ்க்கையில் அது விரைவில் தானாக வெளிப்பட்டுவிடும்.

> விசுவாசத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தால் விசுவாசத்தைப் பற்றிய அறிவுதான் வளருமே தவிர விசுவாசம் வளராது

புதிய உடன்படிக்கையில் விசுவாசம் என்பது ஒரு அடிப்படையான காரியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சிலர் விசுவாசத்தை அளவுக்கு அதிகமாக போதித்து, மக்களுக்கு விசுவாசத்தின் மேல் விசுவாசம் வைக்கச் சொல்லிக்கொடுத்து, விசுவாசத்தையே ஒரு நியாயப்பிரமாணம் போல மாற்றிவிடுகின்றனர். என்னால் விசுவாசிக்க முடியவில்லை என்ற அவிசுவாசமே பலருக்கு தோல்வியாக மாறிவிடுகிறது.

விசுவாசத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தால் விசுவாசத்தைப் பற்றிய அறிவுதான் வளருமே தவிர விசுவாசம் வளராது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி பேசினால் விசுவாசம் தானாக வளரும், சிலுவையை காண்பித்தால் விசுவாசம் தானாக மனதில் ஊற்றெடுக்கும். புதிய உடன்படிக்கையை சொல்லிக்கொடுத்தால் விசுவாசம் தானாக செயல்பட ஆரம்பிக்கும்.

## செழிப்புக்கு எதிரான எண்ணங்கள்

**எண்ணம்: 1**

நீங்கள் கிறிஸ்து உங்களை பணக்காரராக்குகிறார் என்று பிரசங்கித்தால் அதைவிட பெரிய பணக்காரர்கள் உலகத்தில் இருக்கிறார்கள். அம்பானி, டாட்டா, பில்கேட்ஸ் போன்றவர்களை கிறிஸ்து பணக்காரராக்கவில்லை. அவர்களிடம் நீங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கிறிஸ்து உங்களை பணக்காரராக்குகிறார் என்று போதிப்பீர்களானால் நாங்கள் ஏற்கனவே உங்களைவிட பெரிய பணக்காரர்களாகத்தான் இருக்கிறோம் என்று அவர்கள் சொல்லுவார்களல்லவா? கிறிஸ்து உங்கள் பாவங்களை மன்னித்து இரட்சிக்கிறார் என்று போதியுங்கள் அதுதான் சரியான சுவிசேஷம்.

ஆம், நிச்சயமாக கிறிஸ்து பாவத்தை மன்னித்து இரட்சிப்பை அளிக்கிறார் என்பதே சுவிசேஷத்தின் மையம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிட்பண்டு நடத்தும் நபரல்ல, நம்மை பணக்காரனாக்குகிறேன் என்று ஆசைகாட்டி அழைப்பதற்கு…

செழிப்பில் பணமும் அடக்கம், ஆனால் செழிப்பு என்பது பணம் மட்டும் அல்ல என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பரலோக ராஜ்ஜியத்துக்குள் பிரவேசித்ததன் விளைவாக உங்களுக்குக் கிடைத்த செழிப்பான வாழ்வும், உலகப்பிரகாரமான கோடீஸ்வரர்கள் சம்பாதித்து குவித்து வைத்திருக்கும் பணமும் ஒன்றல்ல என்பதை உங்கள் பாணியிலேயே விளக்குகிறேன்.

சரி, நீங்கள் ஒரு குறிப்பிட்ட மதத்தவரிடம் போய் கிறிஸ்து உங்கள் பாவத்தை நீக்கி உங்களை இரட்சிக்கிறார் என்று சொல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். சரி அந்த இரட்சிப்பின் மூலம் என்ன கிடைக்கிறது என்று அவர் கேட்டால், நீங்கள் பரிசுத்தம் கிடைக்கிறது, நித்திய ஜீவன் கிடைக்கிறது, பரலோகத்தில் இடம் கிடைக்கிறது என்று சொல்லுவீர்கள்.

அவர் தங்கள் மதத்தில் உள்ள மகான்களையும், ஞானிகளையும் காண்பித்து, நீங்கள் சொல்லும் எல்லாவற்றையும் இவர்களும் பெற்றிருக்கிறார்கள். பரிசுத்தமாக வாழ்ந்திருக்கிறார்கள், பிறப்பை அறுத்து முக்தி அடைந்திருக்கிறார்கள், வீடுபேற்றையும் அடைந்திருக்கிறார்கள். நீங்களாவது புலால் உண்ணுகிறீர்கள், எங்கள் பரிசுத்தம் உங்களைவிட சிறந்தது என்று சொன்னால் உங்களுக்கு எப்படி இருக்கும். அவர்கள் சொல்லும் பரிசுத்தம் வேறு, நாம் சொல்லும் கிறிஸ்துவினால் உண்டாகும் தேவ நீதி வேறு என்று உங்களுக்கு தெரியுமல்லவா?

கர்த்தர் உங்களை அம்பானி ஆக்குவார் என்பது செழிப்பின் உபதேசமல்ல.

அதே போலத்தான் பரலோக ராஜ்ஜியத்தின் செழிப்பான வாழ்வும், அம்பானி, டாட்டா, பில்கேட்ஸ் போன்ற உலகப் பணக்காரர்களின் செழிப்பான வாழ்வும் ஒன்றல்ல. இரண்டையும் போட்டு குழப்பிக் கொள்ளாதீர்கள். கர்த்தர் உங்களை அம்பானி ஆக்குவார் என்பது செழிப்பின் உபதேசமல்ல.

மனிதனை கர்த்தர் ஏதேனில் எப்படிப் படைத்தாரோ அப்படி வாழ்வதுதான் செழிப்பின் வாழ்வு. விழுகைக்கு முன் அது ஏதேன் வாழ்வு, மீட்புக்குப் பின் அது பரலோக ராஜ்ஜிய வாழ்வு. இந்த வாழ்வை வெறும் பணத்துடன் மட்டும் தொடர்புபடுத்தியும், வெளியே இருக்கும் பணக்காரர்களுடன் ஒப்பிட்டும் பார்க்காதீர்கள். அதுவேறு, இது வேறு.

**மீட்பின் மூலம் கிடைத்த பரலோக ராஜ்ஜியத்தின் செழிப்பு, உலகப்பிரகாரமான கோடீஸ்வரர்களிடம் இருப்பதாகக் காணப்படும் செழிப்பிலிருந்து எவ்விதம் வேறுபட்டது?**

இரண்டு நபர்கள் இருக்கிறார்கள், இருவரிடமும் தலா ஒரு கோடி ரூபாய் பணம் இருக்கிறது. அந்த இருவரில் ஒருவனை பணம் வைத்திருக்கிறது, இன்னொருவன் பணத்தை வைத்திருக்கிறான். இரண்டுக்குமான வித்தியாசம் புரிகிறதா?

புரியும்படி சொல்கிறேன். ஆண்டவராகிய இயேசு தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவர்தான். ஆனாலும் அவர் தனக்கு மாற்றாக ஒரே ஒரு விஷயத்தைத்தான் குறிப்பிட்டார். அது பிசாசு அல்ல, பணம்.

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை, அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார் (லூக்கா 16:13)



உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்று வேதம் சொல்லுவது போல, உலகத்தார் அனைவரும் உலகப்பொருளுக்கே (Mammon) ஊழியம் செய்கிறார்கள். அப்படி செய்யும்படிக்கு இந்த World System அவர்களைக் கட்டி வைத்திருக்கிறது.

இந்த World System என்ற பதம் “பிரபஞ்சம்” என்றொரு வார்த்தையால் நாம் பயன்படுத்தும் தமிழ் வேதாகமத்தில் அழைக்கப்படுகிறது. இங்கு ஒரு வார்த்தைக் குழப்பம் இருக்கிறது. அதை முதலாவது தெளிவுபடுத்துகிறேன்.

பிரபஞ்சம் என்ற வார்த்தை நாம் வாழும் அண்டத்தையும் குறிப்பிடுகிறது. ஆனால் தமிழ் வேதாகமத்தைப் பொறுத்தவரை பிரபஞ்சம் என்ற வார்த்தை விழுந்து போன மனிதனைக் கட்டுப்படுத்த பிசாசு உண்டாக்கிய World System-ஐ மட்டுமே குறிப்பதாக இருக்கிறது. இது மகா பாபிலோன் என்ற வேறொரு வார்த்தையாலும் குறிப்பிடப்படுகிறது.

வேதாகமத்தில் மூன்று பாபிலோன்கள் குறிப்பிடப்படுகின்றன. முதலாவது ஆதியாகமம் 10-ஆம் அதிகாரத்தில் குறிக்கப்படும் நிம்ரோத்தால் ஆளப்பட்ட பாபேல் எனும் பாபிலோன், இரண்டாவதாக நேபுகாத்நேச்சாரால் ஆளப்பட்ட புதிய பாபிலோனிய பேரரசு (Neo-Babylonian Empire), மூன்றாவதாக வெளிப்படுத்தின விசேஷம் 17,18 அதிகாரங்களில் குறிப்பிடப்படும் மகா பாபிலோன். இந்த மூன்றாவது பாபிலோனே “பிரபஞ்சம்” அல்லது World System ஆகும். இந்த சிஸ்டத்தை உருவாக்கிய பிசாசானவனை “இந்தப் பிரபஞ்சத்தின் தேவன்” என்று 2 கொரி 4:4 சொல்லுகிறது.


பொருள்+ஆதாரம் = பொருளாதாரம் என்ற வார்த்தையே இப்பிரபஞ்சத்தில் மனிதனின் ஆதாரம் தேவனல்ல உலகப்பொருள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இயேசுகிறிஸ்து பரிசுத்தமாக மாற்ற மட்டுமே சிலுவையில் மரித்தார், வேறு எதற்கும் இல்லை என்று சாதிப்பவர்கள் நன்றாகக் கவனியுங்கள்.

அவர் நம்மை இப்பொழுதிருக்கிற **பொல்லாத பிரபஞ்சத்தினின்று (Babyloinan World System) விடுவிக்கும்படி** நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (கலாத்தியர் 1:4)

பாவத்தின் விளைவாக பொல்லாத பிரபஞ்சத்துக்குள் (World System) மாட்டிக்கொண்ட மனிதனை அதன் பிடியிலிருந்து கர்த்தராகிய இயேசு விடுவிக்கிறார் என்றும் வேதம் சொல்லுகிறது.

பொருள்+ஆதாரம் = பொருளாதாரம் என்ற வார்த்தையே இப்பிரபஞ்சத்தில் மனிதனின் ஆதாரம் தேவனல்ல உலகப்பொருள் (Mammon) என்பதை உறுதிப்படுத்துகிறது.



யாத்திராகமத்தில் எகிப்திய பார்வோன் எப்படி இஸ்ரவேல் ஜனங்களை அடிமையாக்கி வேலை வாங்கினானோ அப்படியே இந்தப் பிரபஞ்சத்தின் தேவனானவனும் தனக்கு அடிமைப்பட்ட உலக மக்களை தனது World System என்ற வலைக்குள் சிக்கவைத்து, அதற்குள்ளேயே செக்கு மாடுகள் போல சுற்ற வைத்து வேலை வாங்குகிறான். அடிமைப்பட்ட இஸ்ரவேல் மக்களும் தங்கள் பிதாக்களின் தேவனை அறியாமலும், சேவிக்காமலும், சேவிக்க முடியாத சூழலிலும் அகப்பட்டிருந்தனர்.

அதே நிலைதான் இன்றும் பணத்துக்கு அடிமையாகி, அதைத் தேடுவதிலேயே வாழ்க்கையை செலவிட்டு, பணத்துக்காகவே உறவுகளை உண்டாக்கி, பணத்துக்காகவே உறவுகளை இழந்து, பணத்தின் நிமித்தம் சந்தோஷத்தை அடைந்து, பணத்தின் நிமித்தம் சந்தோஷத்தை இழந்து, பணம் வந்ததால் புகழ் அடைந்து, பணத்தை இழந்ததால் அவமானங்கள் அடைந்து, பணத்துக்காக போட்டியிட்டு, பணத்துக்காக பொறாமைப்பட்டு, பணத்துக்காக பிரச்சனைகளில் சிக்கி, பிரச்சனைகளை தீர்க்க பணத்தை நாடி, தன்னைப் பாதுகாக்க பணத்தைத் தேடி, பணத்தைப் பாதுகாக்க தன்னை இழந்து...இப்படி மனிதனின் வாழ்க்கையில் எல்லாமே பணமாகிப் போனது.

பணம் மனிதனின் படைப்புதான், ஆனால் படைத்த பொருளிடம் படைத்தவனே அடிமையாகிப் போன அவலம் இங்கு நிகழ்ந்தது. பணமே மனிதன் சேவிக்கும் மகாப் பெரிய விக்கிரகம் ஆகிப் போனது.

பொருளே ஆதாரம் என்ற நிலையில் இருந்து பிதாவே ஆதாரம் என்ற புதிய சிஸ்டத்துக்குள் பிரவேசித்திருக்கிறோம்.

சிலந்தி வலைக்குள் சிக்கிய பூச்சிபோல பாபிலோனின் வலைக்குள் சிக்கிக் கிடந்த மனிதனை தனது சிலுவை மரணத்தின் மூலம் கர்த்தராகிய இயேசு மீட்டு இரட்சித்திருக்கிறார். மனிதன் பாவத்திலிருந்து மட்டுமல்ல, பாபிலோனிய World System-இலிருந்தும் மீட்கப்பட்டிருக்கிறான்.

கலாத்தியர் 1:4-இல் சொல்லப்பட்டபடி பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து விடுதலையானதின் அடையாளம் என்ன? பொருளாதார விடுதலை..."பொருளாதார விடுதலை" என்ற இந்தச் சொல் இன்று பரவலாக கிறிஸ்தவத்தில் பயன்படுத்தப்படுகிறது. பணம் பெருகுவதற்கு இருக்கும்

தடைகள் நீங்கி, பணவரவு (money flow) சரளமாக வருவதைத்தான் பொருளாதார விடுதலை என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்கள். ஆனால் பொருளே ஆதாரம் என்ற நிலையில் இருந்து, பிதாவே ஆதாரம் என்ற புதிய சிஸ்டத்துக்குள் பிரவேசிப்பதே பொருளாதார விடுதலை. அதாவது பொருள்+ஆதாரத்திலிருந்து விடுதலை. இதுதான் பரலோக ராஜ்ஜியத்தின் சிஸ்டம். இங்கும் பணத்தைத்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் இங்கு பணத்துக்கும் நமக்கும் இருந்த உறவுநிலை மாறுகிறது. பாபிலோனில் நாம் பணத்துக்கு ஊழியஞ்செய்கிறோம், ஆனால் பரலோக ராஜ்ஜியத்தில் பணம் நமக்கு ஊழியம் செய்கிறது.

அதெப்படி மாறுகிறது? வீட்டை விட்டுப்போன இளைய குமாரன் வீடு திரும்பிவிட்டான். இனி தவிட்டுக்காக பன்றி மேய்க்க வேண்டியதில்லை. இனி தேவைகளை அப்பா பார்த்துக்கொள்வார் அவ்வளவுதான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பாருங்கள், அவர் தனது தேவைகள் எப்போதும் சந்திக்கப்படும் நிலையில் இருந்தார். அவருக்கு வரிகட்ட வேண்டும் என்ற சூழல் வந்தபோது வாயில் வெள்ளிப்பணத்துடன் ஒரு மீன் கடலில் காத்திருந்தது. அதற்காக அவர் வேலை செய்யாமல் சம்பாதித்தார் என்று சொல்லவில்லை, அவர் ஊழியத்துக்கு வருமுன் வேலை செய்தார் என்பதற்கு மாற்கு 6:3 சாட்சியாக இருக்கிறது. வாயில் வெள்ளிப்பணத்துடன் கடலில் காத்திருந்த மீனைப் பிடிக்க பேதுரு கடலுக்கு சென்று தூண்டில் போட வேண்டியதாக இருந்தது. வீடு திரும்பிய இளைய குமாரனும் வேலை செய்திருப்பான். ஆனால் அப்பா வீட்டில் வேலை செய்வதற்கும், குடியானவனிடம் பன்றி மேய்ப்பதற்கும் வித்தியாசம் உள்ளதல்லவா?

இயேசு பணத்தைப் பயன்படுத்தினார், ஆனால் உலகத்தார் போல அவர் பணத் தேடலில் தன்னை இழக்கவில்லை

இயேசு பணத்தைப் பயன்படுத்தினார், ஆனால் உலகத்தார் போல அவர் பணத் தேடலில் தன்னை இழக்கவில்லை என்பதே இங்கு நான் சொல்ல வரும் கருத்து. மத்தேயு 8-ஆம் அதிகாரத்தில் கர்த்தராகிய இயேசுவிடம் பேசிய நூற்றுக்கதிபதி "நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய் என்றால் செய்கிறான் என்று சொன்னதுபோல பணம் இயேசுவிடம் வா என்றால் வருகிற, இதைச் செய்யென்றால் செய்கிற வேலைக்காரனாக அவர் காலைச் சுற்றி வந்தது.

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் பரலோக ராஜ்ஜியத்தில் நம்மை போஷிக்க ஒரு பிதா இருக்கிறார். எனவே நாம் உலகத்தாரைப்போல கலங்க வேண்டியதில்லை. இதைத்தான் கர்த்தராகிய இயேசு மத்தேயு 6:25-34 வசனங்களில் சொல்லுகிறார்.



அப்படியானால் நீங்கள் பிதா தேவைகளைத்தான் சந்திக்கிறார், பேராசைகளை பூர்த்தி செய்வதில்லை என்றுதானே சொல்கிறீர்கள் என்று கேட்டால் நிச்சயமாக அப்படித்தான். தேவன் ஒருபோதும் பேராசைகளை பூர்த்தி செய்பவர் அல்ல.

நாம் அவரது பிள்ளைகளாய் இருப்பதால் ஒரு ராஜாவுக்கு என்ன தேவையோ அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்கிறார். நீங்கள் ராஜாவா இல்லையா என்பதை வேதத்தைப் படித்து நீங்களே

முடிவு செய்து கொள்ளுங்கள். அவர் ராஜாக்களின் தேவைகளைத்தான் சந்திப்பாரேயொழிய, அவர்களது பேராசைகளை அவர் பூர்த்தி செய்வதில்லை.

குடியானவனிடம் பன்றி மேய்த்த இளைய குமாரனுக்கு அவன் செய்த வேலைதான் சோறு(தவிடு) போட்டது. ஆனால் அப்பா வீட்டில் அவன் பிள்ளை என்கிற உறவும், உரிமையும்தான் அவனுக்கு அறுசுவை விருந்து வைத்தது. பாபிலோன் வாழ்க்கைக்கும் பரலோக ராஜ்ஜியத்தின் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் இதுதான் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். செய்ய அதிக வேலை; தின்ன குறைந்த தவிடு, இது பாபிலோன் வாழ்க்கை. செய்ய குறைந்த வேலை; தின்ன அறுசுவை விருந்து இதுதான் அப்பா வீட்டில் வாழ்க்கை.



கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் (நீதிமொழிகள் 10:22)

பாபிலோனில் எவ்வளவு குறைவாக சம்பாதித்தாலும் அந்தப் பணம் உங்களை வைத்திருக்கிறது. பரலோக ராஜ்ஜிய வாழ்வில் எவ்வளவு அதிகமாகப் பெற்றிருந்தாலும் அந்தப் பணத்தை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். இதுதான் வித்தியாசம்.

என்ன பிரதர் இப்படி சொல்றீங்க? பரலோக ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது என்று ரோமர் 14:17 சொல்லியிருக்க, நீங்கள் material blessing-ஐயும் பரலோக ராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களோடு சேர்ப்பது சரியா?

நிச்சயமாக பரலோக ராஜ்ஜியம் என்பது புசிப்பும் குடிப்புமல்ல, அது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களான நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமும்தான். ஆனால் அந்த மகிழ்ச்சி மனதை நிறைக்கும்போது அது உங்கள் வெளிப்புற வாழ்வில் பிரதிபலிக்கிறது. உங்கள் ஆத்துமாவுக்குள் என்ன இருக்கிறதோ அதுதான் உங்கள் வெளிப்புற வாழ்வில் பிரதிபலிக்கிறது என்பதை இந்தப் புத்தகத்தில் திரும்பத் திரும்ப சொல்லிவருகிறேன்.

எனக்கு இந்தப் பொருட்களெல்லாம் கிடைத்தால் நான் மகிழ்ச்சியாயிருப்பேன் என்று நாம் சொல்லுகிறோம். ஆனால் நீ மகிழ்ச்சியாயிரு சகலத்தையும் ஈர்த்துக் கொள்வாய் என்பது தெய்வீக நியதி.

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார் (சங்கீதம் 37:4)

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33)

**எண்ணம்: 2**

ஐசுவரியவான்கள் பரலோக ராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பது அரிது, ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று மத்தேயு 19:24-இல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்னது நினைவில்லையா? ஐசுவரியம் என்பது உங்களை தேவனிடம் அண்டவிடாமல் தடுக்கும் ஒரு சக்தி. அது எல்லா தீமைகளுக்கும் வேராயிருக்கிறது. அநேகர் அதனால் தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள். அது நமக்கு தேவையா?

இளைய குமாரன் கெட்டு சீரழிந்ததற்கு அவன் கையிலிருந்த செல்வம்தான் காரணம். அப்பாவை விட்டு பிரிந்து வாழ்வதற்கும், விரும்பிய பாவங்களைச் செய்வதற்கும் அதுதான் அவனுக்கு தைரியம் கொடுத்தது. அந்த ஐசுவரியம் கேடுள்ளது. அது தான் இருக்கும்வரை எந்த மனிதனையும் படைத்தவரிடம் அண்ட விடாது.

அவன் முன்பு வைத்திருந்த ஐசுவரியத்துடன் பாவம் ஒட்டியிருந்தது. அவன் இப்போது வைத்திருக்கும் ஐசுவரியத்துடன் “கடமை” ஒட்டிக்கொண்டிருக்கிறது

ஆனால் அதே இளைய குமாரன் மனந்திரும்பி அப்பாவிடம் வந்து சேர்ந்த பின்னர். அவனுக்கு மறுபடியும் செல்வமும் அதிகாரமும் கொடுக்கப்பட்டதல்லவா? அது நியாயமா? அதன் நோக்கம் என்ன? அவன் மீண்டும் தன் இஷ்டப்படி வாழ்ந்து வேசிகளிடம் செலவிட்டு அழிக்கவா?

நிச்சயமாக இல்லை, அப்பா வீட்டில் ஒரு குமாரனாக அவன் செய்ய வேண்டிய கடமைகள் நிறைய இருந்தது. அதற்கு அவனிடம் செல்வமும், அதிகார முத்திரை மோதிரமும் இருக்க வேண்டியது அவசியம். அதுதான் அவன் அந்த வீட்டில் மீண்டும் **மகனாக** ஏற்றுக்கொள்ளப்பட்டான் என்பதற்கான அடையாளமே!

மனந்திரும்பி வீடு வந்து சேர்ந்த இளையகுமாரனிடம் ஐசுவரியமும், அதிகாரமும் கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்னவோ அதேதான் இரட்சிக்கப்பட்டு, உடன்படிக்கையை நன்கு விளங்கிக்கொண்ட விசுவாசியிடம் ஐசுவரியமும், அதிகாரமும் கொடுக்கப்படுவதன் நோக்கமும். அவன் முன்பு வைத்திருந்த ஐசுவரியத்துடன் பாவம் ஒட்டியிருந்தது. அவன் இப்போது வைத்திருக்கும் ஐசுவரியத்துடன் “கடமை” ஒட்டிக்கொண்டிருக்கிறது. இரண்டுக்குமான வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளுங்கள்.




தேவன் தாம் தெரிந்துகொண்டு உடன்படிக்கை போட்டவர்களுக்கு செழிப்பை தருகின்றாரென்றால் அது அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அவர்கள் மூலமாக உலகத்தார் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

ஆதாம் பாவம் செய்தபின் விழுந்துபோன உலகத்தோடு தேவனால் நேரடியாக இடைப்பட முடியாது. ஏனெனில் உலகில் சட்டதிட்டங்கள் இருப்பதுபோல, ஆவிக்குரிய உலகத்திலும் சட்டதிட்டங்கள் இருக்கின்றன. தான் போட்ட சட்டத்தை தேவன் தானே மீற மாட்டார்.

ஏதேனில் இருந்த ஆதாமுக்கும் தேவனுக்கும் இடையே எந்த உடன்படிக்கையும் தேவையில்லை. ஆனால் சாத்தானுக்கு அடிமையாகி விழுந்துபோன மனிதருடன் தேவன் இடைப்பட வேண்டுமானால் உடன்படிக்கை என்ற ஒரு சேனல் அவசியமாகிறது. தான் விரும்பிய ஒருவனை தேர்ந்தெடுத்து, அவனை ஆசீர்வதித்து அவன் மூலமாக ஒட்டுமொத்த உலகையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்பதுதான் தேவதிட்டம். அப்படித்தான் அவர் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தார்.

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார் (ஆதி 12:3)

ஆபிரகாமின் சந்ததியில்தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வந்தார். அவர்மூலமாக உலகுக்கு மீட்பு வந்தது. இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு மீட்கப்பட்ட நாம் “தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்” என்று வேதம் சொல்லுகிறது. அப்படியானால் நம்மை மட்டும்தான் தேவன் நேசிக்கிறார் மற்றவர்களை அவர் நேசிக்கவில்லையா என்றால், அப்படியல்ல...எல்லோரையும் அவர் நேசிக்கிறார். எனவேதான் அவர் நம்மைத் தேர்ந்தெடுத்து நம்மூலம் உலகத்தார் அனைவரையும் ஆசீர்வதிக்கிறார். நாம் ஆசீர்வாத வாய்க்கால்களாக இருக்கிறோம்.

ஒரு அப்பா தன் மகனை ஒரு ஹாஸ்டலில் சேர்த்து படிக்க வைக்கிறார். ஒருநாள் தன் மகனைப் பார்க்க அவர் ஹாஸ்டலுக்குப் வருகிறார். வரும்போது அவனுக்குப் பிடித்த தின்பண்டங்களை வாங்கிக் கொண்டு போகிறார்.

அந்த தின்பண்டங்களைப் பிரித்துப் பார்க்கும் மகன் சொல்கிறான், "அப்பா எங்க ஹாஸ்டலில் இந்தப் பண்டங்களையெல்லாம் கண்ணால்கூட கண்டிராத ஏழை மாணவர்கள் நிறையப் பேர் படிக்கிறார்கள்". அவன் சொன்னது அப்பா மனதை பாரமாக்கி விடுகிறது. எதுவும் பேசாமல் அமைதியாகச் சென்றுவிடுகிறார்.

அடுத்த வாரம் மகனைப் பார்க்க அப்பா மீண்டும் ஹாஸ்டலுக்கு வருகிறார். இப்போது அவர் இரண்டு கைகளிலும் பெரிய பைகளில் ஏராளமான தின்பண்டங்களைக் கொண்டு வருகிறார்.

இப்போதும் அப்பாவால் நேரடியாக ஒவ்வொரு ஹாஸ்டல் அறைக் கதவையும் தட்டி அந்த தின்பண்டங்களைக் கொடுக்க முடியாது. அதற்கு அந்த ஹாஸ்டல் நிர்வாகத்தின் சட்டதிட்டம் இடம் கொடுக்காது. ஆனால் அவர் அதைத் தனது மகன் மூலமாக செய்ய முடியும்.

மகன் அந்த பண்டங்களை தன் நண்பர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க, அதை அவர்கள் தங்கள் நண்பர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க அப்படியே வெகு விரைவில் ஹாஸ்டல் முழுவதும் அந்தப் பண்டங்கள் பகிரப்பட்டுவிடும்.

பிரியமானவர்களே, இப்படித்தான் உடன்படிக்கை செயல்படுகிறது. தேவன் உங்களுக்கு செல்வச் செழிப்பைக் கொடுப்பது நீங்களும் ஆசீர்வாகமாக வாழ்ந்து, மற்றவர்களையும் ஆசீர்வதிக்கத்தான். இதைப் புரிந்துகொண்டால் செல்வம் எப்போது ஆபத்தாகிறது, எப்போது ஆசீர்வாதமாகிறது என்பது புரிந்துவிடும்.

**எண்ணம்: 3**

கர்த்தராகிய இயேசுவோ, அல்லது ஆதி அப்போஸ்தலர்களோ செழிப்பை அனுபவித்தார்களா? அவர்கள் பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தல்லவா ஊழியம் செய்தார்கள்? நீங்கள் யாரைப் பின்பற்றுகிறீர்கள்?

முதலாவது செழிப்பு என்றால் என்னவென்பதை சரியாக விளங்கிக் கொள்ளுங்கள்.

கர்த்தராகிய இயேசுவோ அல்லது ஆதி அப்போஸ்தலர்களோ தாங்கள் செய்ய நினைத்த ஒரு ஊழியத்தை தடையின்றி, சிரமமின்றி செய்ய முடியாமல் தத்தளித்தார்களா?

அல்லது …

தேவையான ஏதோ ஒன்று இல்லாத காரணத்தினால் தங்கள் ஊழிய திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் அதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து செய்வதறியாது தடுமாறிக் கொண்டிருந்தார்களா?

பேதுருவோ, பவுலோ, யோவானோ எதிர்பாராதவிதமாக கேன்சர் நோயால் ஆட்கொள்ளப்பட்டதால், அல்லது பக்கவாதம் அவர்களை திடீரென்று தாக்கியதால் செய்ய நினைத்த ஊழியத்தை செய்ய முடியாமல் படுத்த படுக்கையாகி, முடங்கிப்போய் ஊழியத்தை பாதியில் விட்டுவிட்டு மரித்தார்களா?…இதுதான் அவர்கள் அனுபவித்த செழிப்பாகும். கல்லால் எறியுண்டு குற்றுயிராய் வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்து சுவிசேஷத்தை அறிவிக்க பவுலை கர்த்தர் பெலப்படுத்தினார். எப்பேற்பட்ட வாழ்க்கை அது!

திட்டமிட்டிருந்த ஊழியப் பயணத்தை பணமின்றியோ அல்லது வாகன வசதிகள் இன்றியோ இயேசுவோ அப்போஸ்தலர்களோ பயணத்தை எப்போதாவது கைவிட்டார்களா? கொடூரமான புயல் வீசினாலும், கப்பற்சேதமே நேரிட்டாலும் திட்டமிட்ட இடத்துக்கு, திட்டமிட்ட நேரத்தில் அவர்களால் போய்ச் சேரமுடிந்தது செழிப்பில்லையா? இது அக்காலத்திய ராஜாக்களுக்கும், செல்வந்தர்களுக்குமே சாத்தியமாகாத செழிப்பு இல்லையா?

ரோம அரசாங்கம் காவலர்களை அனுப்பி அப்போஸ்தலர்களை சிறை வைத்தது, பரலோக அரசாங்கம் தூதர்களை அனுப்பி சிறைகளை திறந்துவிட்டது. அப்போஸ்தலர்கள் செய்ய நினைத்ததை அரசாங்கங்கள்கூட தடுக்க முடியவில்லை இது செழிப்பில்லையா?

அப்படியானால் அப்போஸ்தலர்கள் அனுபவித்த உபத்திரவம் என்ன? அது சக மனிதர்களால் உண்டான பாடுகள் மட்டுமே!.

அப்படியானால் அப்போஸ்தலர்கள் அனுபவித்த உபத்திரவம் என்ன? அது சக மனிதர்களால் உண்டான பாடுகள் மட்டுமே! அவர்களது அவதூறுகள், அடிகள், காயங்கள், கட்டுக்கள் இவைகள்தான் அப்போஸ்தலர் அனுபவித்த பாடுகள். அவர்களுக்கும் மட்டுமல்ல நாம் உட்பட எல்லாத் தலைமுறை விசுவாசிகளும் அனுபவித்த, அனுபவிக்கப் போகிற பாடு இது மட்டுமே! வியாதியோ, வறுமையோ, பற்றாக்குறையோ வேதம் சொன்ன பாடு, உபத்திரவங்கள் அல்ல.

கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர்நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு (பிலி 1: 29,30)

அப்போஸ்தலர்களிடம் விலையுயர்ந்த சாரட்டு வண்டிகள் இல்லை, வெளிநாடு சென்று ஊழியம் செய்ய சொந்தக் கப்பல்கள் இல்லை, ஊழியத்துக்கென்று மாடமாளிகைகள், கட்டிடங்கள் இல்லை ஆனாலும் அவர்கள் என்ன செய்ய நினைத்தார்களோ அதை செய்து முடிப்பதற்கான

அத்தனை தேவைகளும் அவர்களுக்கு மின்னல் வேகத்தில் வந்து கிடைத்தன. அந்தச் செழிப்பைத்தான் நான் இங்கு பேசுகிறேன்.


அப்படியானால் வாகனங்களோ, கட்டிடங்களோ யாரும் சொந்தமாக வைத்துக் கொள்ளகூடாதா என்றால் நான் அப்படிச் சொல்லவில்லை, அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலத்து அரசியல், சமூகச் சூழல்கள் வேறு, நமது காலத்திய சூழல் வேறு. இக்காலத்தில் தாராளமாக யாரும் ஊழியத்துக்கோ சொந்த உபயோகத்துக்கோ கட்டிடம், வாகனம் மற்றும் வசதி வாய்ப்புகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால் விசுவாசத்தினால் வந்த எதுவும் நலமே, விசுவாசத்தினால் வராத எதுவும் பாவமே என்பதை மட்டும் புரிந்துகொண்டால் போதும்.

யாரோ சில பிலேயாம்கள், கேயாசிக்கள் வேதத்துக்கு புறம்பாக, பொருளாசையால் செய்யும் மோசடிகளுக்காக, எல்லோரையும் துறவறத்தை நோக்கி துரத்துவது சரியல்ல, அது தேவசித்தத்துக்கும், தேவதிட்டத்துக்கும் எதிரானது.

**எண்ணம்: 4**

பிசாசு இயேசுவை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று பிசாசானவன் இயேசுவிடம் எதையெல்லாம் வாக்குப்பண்ணினானோ அதைத்தான் செழிப்பு உபதேசமும் தருவதாக விசுவாசிகளும் வாக்குப்பண்ணுகிறது. அப்படியானால் அது பிசாசின் உபதேசம்தானே! நித்தியத்துக்கு எது தேவையோ அதை மட்டும் பேசுங்கள். நாம் இந்த உலகத்திலேயே தங்கி தாபரிக்கப் போவதில்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தனது நரித்தந்திரத்தால் ஏமாற்ற முடியாது என்பது பிசாசுக்கு நன்றாகத் தெரியும். எனவே அவரிடம் பொய்யான வாக்குறுதியைக் கொடுத்து ஏமாற்ற முடியாது அல்லது அவருக்கு தேவையற்ற ஒன்றைத் தருவதாகவும் சொல்லி அவரை வசப்படுத்தவும் முடியாது. அதாவது என்னை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியால் உம்மை பாதாளலோகத்தின் அதிபதியாக்குகிறேன் என்றோ, பிசாசுகளின் தலைவன் ஆக்குகிறேன் என்றோ அவருக்கு ஒரு offer-ஐத் தரமுடியாது.



அவரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றை முன்வைத்துதான் அவனால் டீல் பேசமுடியும். அதைத்தான் அவன் அங்கு செய்திருக்கிறான். வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்கு பாதப்படி என்று சொன்னவரை எந்தப் பொருளைக்காட்டியும் வசப்படுத்த முடியாது. ஏனெனில் சகலமும் அவருடையது. ஆனால் ஆதாமின் மீறுதலால் வீழ்ந்துபோன மனிதரை மீட்டு, அவர்கள் இழந்த, அவர்களுக்குச் சொந்தமான உரிமைச் சொத்துக்களை மறுபடியும் மீட்டு அவர்களுக்கே திருப்பித்தர அவர்களில் ஒருவராக மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அவர் வந்ததை அவன் அறிந்திருக்கிறான். அதுவே அவரது முதல் வருகையின் நோக்கம்.

கல்வாரி சிலுவையில் வைத்து தனது யுத்தத்தை

முடிப்பதாக அவர் வைத்திருந்த திட்டத்தை திசைதிருப்பவே சாத்தான் ஒரு குறுக்குவழியை அவருக்கு முன் வைக்கிறான். அவர் சிலுவைக்குப் போனால் தன் தலை நசுக்கப்படுவது உறுதி என்பது அவனக்கு தெரிந்திருந்ததாலேயே திருடிய பொருட்களை திருப்பிக் கொடுத்தேனும் அந்த திட்டத்தை முறியடிக்க அவன் திட்டமிடுகிறான்.

இங்கு கர்த்தராகிய இயேசு அவன் கொடுத்த offer-ஐக் குறித்து கருத்து எதுவும் சொல்லாமல், அதற்காக அவன் போட்ட நிபந்தனைக்கு மட்டுமே பதில் சொல்லுகிறார்:

அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத் 4:10)

...அப்படியானால் அவன் கொடுத்த offer சரியானதுதான்

அப்படியானால் அவன் கொடுத்த offer சரியானதுதான். அவன் கொடுத்த offer-ஐ அவனது நிபந்தனைக்கு உட்படாமலேயே தனது சிலுவை யுத்தத்தின் வழியாக ஒட்டுமொத்தமாக அவனிடமிருந்து கர்த்தர் பறித்தார். அதை அவர் தனக்காகச் செய்யவில்லை. நமக்காகத்தான் செய்தார். ஏனெனில் அது நமது உரிமைச் சொத்து.

பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார் (சங்கீதம் 115:16)

நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, நாம் நமது நித்தியத்தை பிதாவின் வீட்டில்தான் கழிக்கப் போகிறோம். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் இந்த பூமியில் வாழும்வரை நாமும் நமது சந்ததிகளும் மீண்டும் பழைய மாதிரியே world system-க்கு அடிமைகளாக வாழ்வது அவமானம். அது தேவசித்தம் அல்ல. நமக்குள் குமாரனின் சாயல் வந்துவிட்டது என்பதை நாம் மறக்கக்கூடாது. குமாரனது ஆவியால் பிசாசின் சிஸ்டத்துக்கு கீழ்ப்படிய முடியாது.



ஒருவன் கண்டத்தையே கட்டியாளும் சக்கரவர்த்திக்கு மகனாகப் பிறந்தால்கூட தான் குழந்தையாக இருக்கும்வரை தான் யாரென்ற அறிவொ, தனது சுதந்திரம்(inheritance) எதுவென்ற தெளிவோ அவனுக்கு இருக்காது. ஆனால் வளர, வளர அவன் அதை அறிந்துகொண்டு உரிமை பாராட்டத் துவங்கிவிடுவான். அதுதான் ஆவிக்குரிய உலகிலும் நடக்கிறது. எபிரேயர் ஆக்கியோன் சொன்னதுபோல பால் குடிக்கும் ஆவிக்குரிய குழந்தைகளுக்கு, தாங்கள் யார் என்ற அறிவோ, தனது "சுதந்திரம்(inheritance)" பற்றிய தெளிவோ இருக்காது. ஆனால் குமாரனின் ஆவி நமக்குள் இருப்பதால் "நான் சுதந்திரவாளி" என்ற உணர்வு ஒருநாள் வந்தே தீரும்.

சபையும் அப்படித்தான். ஒரு தனிமனிதனுக்கு வளர்ச்சி இருப்பதுபோலவே பெந்தேகொஸ்தே நாளன்று ஆவியானவராகிய ஜீவனைப் பெற்று பிறந்த சபைக்கும் ஒட்டுமொத்த வளர்ச்சி இருக்கிறது. கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று

இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரம் என்று கொலோசேயர் 2:18 சபையைக் குறித்து சொல்லுகிறது.

சபை குழந்தையாக இருந்த காலங்களிலும் கர்த்தரின் கிருபையால் மாபெரும் தேவ ஊழியர்கள், அப்போஸ்தலர்கள் மூலம் சபைக்கு அவ்வப்போது எழுப்புதல் வந்து கொண்டிருந்தது. ஆனாலும் அப்போதும் சபை குழந்தைதான். கிறிஸ்து மணவாட்டியை சந்திக்க வருகிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம். **ஆனால் மணவாட்டி குழந்தையாக இருந்தால்...?**

நிச்சயமாக கிறிஸ்து எப்போது வருகிறாரோ அப்போது மணவாட்டியும் திருமணத்துக்கேற்ற வளர்ச்சியடைந்திருப்பாள் அல்லது எப்போது மணவாட்டி வளர்ச்சியடைந்திருக்கிறாளோ அப்போது மணவாளனின் வருகை நிச்சயமாக எதிர்பார்க்கப்படும்.

நிச்சயமாக கிறிஸ்து எப்போது வருகிறாரோ அப்போது மணவாட்டியும் திருமணத்துக்கேற்ற வளர்ச்சியடைந்திருப்பாள் அல்லது எப்போது மணவாட்டி வளர்ச்சியடைந்திருக்கிறாளோ அப்போது மணவாளனின் வருகை நிச்சயமாக எதிர்பார்க்கப்படும். சபையில் பிள்ளைகள்(teknon), புருஷர்கள்(huios) என்று இரு பிரிவினர் இருந்ததாக நாம் வேதத்தில் காண்கிறோம். இருவருமே இரட்சிகப்பட்ட விசுவாசிகள்தான். அவர்கள் இருவருக்கும் இருந்த வேறுபாடு சத்தியத்தை அவர்கள் உள்வாங்கும் முதிர்ச்சியை வைத்து வரையறுக்கப்படுகிறது.

காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (எபி 5: 12-14)

ஆதாம் இளைஞனாக பிறப்பிக்கப்பட்டது போலவே சபை தொடங்கிய நாட்களிலும் பல huios-க்கள் இருந்ததை நாம் முதல்நூற்றாண்டு சபை வரலாற்றில் பார்க்கிறோம். ஏராளமான இரத்த சாட்சிகளின் இரத்தம் நிலத்தில் விதையாக சிந்தப்பட்டது. அப்போஸ்தலர் முதல் நான்கு அதிகாரங்கள் தேவபுத்திரரின் வாழ்க்கைக்கான முன்ருசிபோல காணப்படுகிறது. ஆனால் மக்கள் கூட்டம் கூட்டமாக சேரச்சேர teknon-களின் எண்ணிக்கை அதிகமாகிறது. அதன் விளைவாக சபையில் ஏகப்பட்ட பிரச்சனைகள், பிரிவினைகள், பாவங்கள், உபதேசக் குளறுபடிகள் எனவேதான் அப்போஸ்தலர்கள் நிருபங்களை சபைக்கு எழுதவேண்டியது அவசியமாயிற்று. அது நல்ல ஊழியர்கள் பலர் இருந்த காலமானாலும் அது சபைக்கு குழந்தைப் பருவம்தான்.

நாம் தேவபுத்திரரானால் நமக்குள் வாசம் செய்யும் குமாரனின் ஆவி சுதந்திரத்தைக் கைப்பற்றிக்கொள்ள நம்மை ஏவத்தான் செய்யும். இது நமது மரபணுவில் எழுதப்பட்டது.

இது கடைசிகாலம், கள்ளப் போதகங்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் பெருகியிருக்கிற காலம். ஆனால் இது குழந்தைப் பருவத்திலேயே சபை தரித்திருக்கும் காலமல்ல. இது புருஷர்கள்(huios) எழும்புகிற காலம். இனி அழுகையின் பிரசங்கங்கள் குறைந்து ஆளுகையின் பிரசங்கங்கள் ஒலிக்கத் துவங்கும். அதுவே அடையாளம்!

நாம் தேவபுத்திரரானால் நமக்குள் வாசம் செய்யும் குமாரனின் ஆவி சுதந்திரத்தைக் கைப்பற்றிக்கொள்ள நம்மை ஏவத்தான் செய்யும். இது நமது மரபணுவில் எழுதப்பட்டது. இதைக் கள்ளப்போதகம் என்று பிசாசால் வெகுநாட்கள் அமிழ்த்தி வைக்க முடியாது. துறவறத்தையும், வெறுமையையும், தோல்வியையும் நோக்கி நம்மைத் தள்ளுவதுதான் கள்ளப்போதகம்.

ஆயிர வருட அரசாட்சி எனும் ஆலமரம் எழும்புவதற்கான முளை கிளம்பிவிட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நம்மைக் கொண்டுதான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆளுகை செய்யப்போகிறார். இனி பிரசங்கங்களும், ஊழியங்களும் அந்த திசையை நோக்கித்தான் திரும்பும். இது காலத்தின் கட்டாயம்!

இந்த மின்புத்தகத்தை எழுதியதன் நோக்கம் தனிப்பட்ட விசுவாசிகளை செழிப்புக்குள் நடத்த வேண்டும் என்பது மட்டுமல்ல. மணவாட்டி சபை உலகின் அத்தனை ராஜ்ஜியங்களையும், அவைகளின் மகிமைகளையும் கைப்பற்றி தனது காலுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும் என்பதுதான். அப்படியானால் பூமியிலேயேதான் தங்கித் தாபரிக்கப் போகிறோமா?

நிச்சயமாக இல்லை, வாழ்க்கை ஒரு வட்டம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? விழுந்துபோன ஆதாமிடம், “மண்ணிலிருந்து வந்தாய் மண்ணுக்கே திரும்புவாய்” என்று தேவன் சொன்னார். பக்தனாகிய யோபு தனது உள்ளத்தின் விசாரத்தின் மிகுதியால் “நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்” என்றார். ஆம், வாழ்க்கை ஒரு வட்டம்தான்… “நாம் மகிமையோடு ஏதேனில் பிறந்தோம், அதே மகிமையோடு பூமிக்கு விடைகொடுத்து நித்திய வீடு செல்வோம்”.

**எண்ணம்: 5**

நீங்கள் சொல்வதுபோலத்தான் கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கிறார், கலங்காதே, திகையாதே, உன் துக்கநாட்கள் முடிந்து போயின என்றெல்லாம் ஊழியர்கள் டிவியிலும் மேடைகளிலும் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் செழிப்பு உபதேசம் என்கிறீர்களா? இது காலங்காலமாக நடந்துகொண்டுதானே இருக்கிறது?

நிச்சயமாக இல்லை, அவர்களெல்லோரும் வேதாகமத்தில் உள்ள வாக்குத்தத்தங்களைச் சொல்லி அல்லது வேதத்தில் தேவன் செய்த அற்புதங்களைச் சொல்லி கர்த்தர் இதுபோலவே உன்னையும் ஆசீர்வதிப்பார் என்று சொல்லி அனுப்பிவிடுகின்றனர். இது கிட்டத்தட்ட "அருள்வாக்கு" சொல்லும் பாணிதான். இது எந்த விதத்திலும் பயனைத் தராது. இந்தப் பிரசங்கங்கள் "அப்பா உனக்கு பொம்மை வாங்கித் தருவார்" என்பது போல teknon-களுக்கு ஆறுதல் தரும், ஆனால் huios-க்கள் உருவாகப் பயன்படாது.

அருள்வாக்கு கேட்கும் ஜனங்களிடம், "சாமி உனக்கு நல்லது செய்யும்" என்று சொன்னால் “எந்த அடிப்படையில் எனக்கு நன்மை செய்யும்?” என்று யாருமே திருப்பிக் கேட்கமாட்டார்கள். ஏனென்றால் அங்கு இருப்பது கடவுள், பக்தன் என்ற உறவு மட்டுமே! அது உலகத்தின் மதங்களுக்கு வேண்டுமானால் சரியாக இருக்கும். இந்த முறை கிறிஸ்தவத்தில் செல்லவே செல்லாது. ஆனால் ஒருவிதத்தில் நியாயப்பிரமாண நரகப் பிரசங்கத்துக்கு இது எவ்வளவோ தேவலாம். கர்த்தர் நல்லவர் என்கிற உணர்வாவது மிஞ்சும்.

கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை மனம், அறிவு இரண்டுமே மிகவும் முக்கியம். கர்த்தரை அறியும் அறிவு, கிறிஸ்துவுக்குள் தான் யார் என்கிற தெளிவு, புதிய உடன்படிக்கையை புரிந்துகொள்ளும்

முதிர்ச்சி இவற்றுக்கு நேராக விசுவாசிகள் வழிநடத்தப்பட்டால்தான் சபை சரியான பாதையில் செல்லும். எனவே டிவியில் பெரும்பாலான பிரசங்கிமார்கள் செய்வது செழிப்பின் பிரசங்கம் அல்ல. அது ஒரு அருள்வாக்கு மட்டுமே!

**முடிவுரை:**

இந்த சின்னஞ்சிறு மின்புத்தகத்தின் நோக்கம் செழிப்பை ஒரு விசுவாசி விரும்புவது வேதத்தின்படி சரி  என்பதை விளக்குவது மட்டுமே. கர்த்தருக்கு சித்தமானால் இதைக் குறித்து இன்னும் அநேக காரியங்களை பிரசங்கிக்கவும், எழுதவும் தேவன் அருள் செய்வாராக!

உலகம் தரும் பொருளாசையில் லயித்துக் கிடப்பது வேறு, பரலோக ராஜ்ஜியத்தின் செழிப்புக்குள் வாழ்வது வேறு. உலகம் காட்டும் செழிப்பு பாவத்தோடு இணைக்கப் பட்டது. பரலோக ராஜ்ஜியத்தின் செழிப்பு புத்திரனின் பொறுப்போடு இணைக்கப்பட்டது.

உலகம் முழுவதிலும் உள்ள உளவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்களின் ஒட்டுமொத்தக் கருத்து "பயம் என்ற உணர்வுதான் செழிப்புக்கு எதிரி" என்பதுதான். பயம் வேண்டுமானால் செழிப்புக்கு எதிரியாக இருந்துவிட்டுப் போகட்டும், நீங்களும், நானும் செழிப்புக்கு எதிரியாக இருக்க வேண்டாம். ஏனென்றால் அது தேவனுடையது!

செழிப்பு என்பது வெறும் பணம் மட்டும் அல்ல, தேவனோடு உள்ள உறவு, விடுதலையான வாழ்வு, நீதி, பரிசுத்தம், சமாதானம், சந்தோஷம், ஐசுவரியம், ஆரோக்கியம், அன்பான உறவுகள், நிறைவு, இளைப்பாறுதல், காரியசித்தி, எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கை, அதிகாரம், ஆளுகை அத்தனையும் செழிப்புதான். இவற்றில் இது உலகத்துக்குரியது, இது பரலோகத்துக்குரியது என்று பிரிக்க வேண்டிய அவசியமில்லை. மேற்சொன்ன அத்தனையுமே பரலோக ராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்கள்தான். ஐசுவரியமும், ஆரோக்கியமும்கூட ஆவிக்குரியதுதான். உலகத்துக்கும் நமக்கும் இனி சம்பந்தம் இல்லை. நாம் உலகத்தில் இருந்தாலும் உலகத்துக்குரியவர்கள் அல்ல.

நீங்கள் மேற்கண்ட அனைத்திலும் செழிப்பாக இருந்தால்தான் அவற்றை நீங்கள் மற்றவர்களுக்கும் வழங்க முடியும். நீங்கள் வாழ்ந்து செழித்திருக்கும்படி தேவன் விரும்புகிறார்.

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவா 1:2 )